திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஏற்கெனவே சென்னையிலிருந்து வேதாரண்யம் சென்று திரும்பிய திருவள்ளுவர் துரிதப் பேருந்து சரியான நேரத்தில் வந்து கொண்டிருந்தது. ரயில்வே கால அட்டவணைப்படி 9-20-க்கு சென்னை எக்ஸ்பிரஸ் வருகிறது. அதற்கு முன்னதாக பஸ் வரக்கூடிய வாய்ப்பு இருந்தால், இதில் இடம் இல்லாவிட்டாலும், ரயிலிலே செல்லும் வாய்ப்பு இருந்தது. ஆனால் 9-20-க்குள் பஸ் வரும் சூழ்நிலை இல்லாததால், பஸ்ஸை நம்பாமல் ரயிலிலேயே செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். எனவே ரயில் வருவதற்கு முன்பு திருத்துறைப்பூண்டிக்கு பஸ் வருவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து கவனத்தில் கொண்டு செயலாற்றப்படும். அங்கே யாரும் வண்டியில் ஏறவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தப்படவில்லை. அது குறைந்த தூரம்தான் ஓடுகிறது. சாதாரணமாக 550 கிலோ மீட்டர் ஓட வேண்டும். ஆனால் அங்கே 396 கிலோ மீட்டர்தான் ஓடுகிறது. இதனால் கட்டுமானச் செலவுகள் அதிகமாகுமென்பதால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது இன்னொரு டிரிப் அதிகமாக்கப்பட்டு, மூன்று பேருந்துகளை விட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

Bus Permits

* 94 *Q*.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of bus permits issued to individuals who have undertaken to lay the roads on which the Buses were intended to ply ;

(*b*) the details of the distances so laid for each of the permits so issued ; and

(*c*) the cost thereof in each case ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இது போன்றதொரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அறிவித்ததாக எனக்கு நினைவு. அரசு அந்த அறிவிப்பின் அடிப்படையில் ஏதாவது நடவடிக்கைகளை இனிமேல் எடுக்க இருக்கிறதா அல்லது அந்தப் பரிந்துரை அரசின் கவனத்திற்கு வராமல் கைவிடப்பட்டிருக்கிறதா ?

1961 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இதைச் செயல்படுத்த வேண்டுமென்றுதான் அரசாங்கம் முயற்சி எடுத்தது. அப்படி முயற்சி எடுக்கின்றபோது, மாநிலப் போக்குவரத்து அதிகாரியும், மண்டலப் போக்குவரத்து அதிகாரிகளும் விதி 57-லே அதைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விதி 155-ன்படி சில வழிமுறைகளை இதற்காக ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். ரோடுகளைப் போடுகிறவர்களுக்குப் பேருந்து உரிமம் வழங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போட முடியாது. அதில் தலையிடவும் முடியாது. விதிகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்பாட்டைச் செய்தபோது, மக்களிடத்தில் அதற்கு ஆதரவு எப்படி இருக்கிறதென்று பார்த்தபோது, சரியான ஆதரவில்லை. எனவே, இதில் புதிய முறைகளைக் கொண்டு வந்து, மக்கள் ஏற்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: இதில் வேறு மாற்றங்கள் செய்வது பற்றிய பரிசீலனை இருந்தாலும், அதற்கிடையிலே கிராம மக்களுக்குப் பேருந்து வாய்ப்புகள் கிடைக்கும் வகையிலே இப்போது இருக்கின்ற திட்டத்தின் அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா? மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கருத்துகூட அந்த அடிப்படையிலேதான் வெளி வந்ததென்ற காரணத்தால், கிராம மக்களுக்கு அதிகப்படியான பேருந்து வசதிகளைச் செய்ய என்ன வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததே, அரசாங்கம் கிராமங்களில் சாலைகளைப் போடுவதற்கு முன்பாக, தனியார்கள் சாலைகளைப் போட்டால் பேருந்து வசதிகள் கிராமங்களுக்குக் கிடைக்குமென்பதற்காகத்தான். ஒரு கிலோ மீட்டர் சாலை போட 30,000 ரூபாய் செலவாகுமென்ற நிலைமை இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் கட்டண விகிதம், இதர செலவுகள் போன்றவற்றைப் பார்க்கும்போது, இதைச் செய்ய முன்வருவார்களா என்று பார்த்தால், முன்வரவில்லை என்ற நிலையில், இப்போது அது சாத்தியமாக இராதென்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. கிராம மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை. அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளைப் போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, ஏற்கெனவே இரண்டு மூன்று முறை நான் சொல்லியது போன்று, கட்டணத்தைப் பொறுத்த

வரையில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு கொடுத்தால் இரண்டு ஆண்டுக் காலத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் வசதிகளைச் செய்ய முடியு மென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இப்போது சில கிராமப் பகுதிகளிலே ஓடிக் கொண்டிருக்கிற அல்லது ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள்கூட சில இடங்களிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. அமைச்சரவர்கள் சில ஊர்களிலே மீண்டும் துவங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன். எனவே ஏற்கெனவே பேருந்து ஓடிக்கொண்டிருந்த எல்லாக் கிராமங்களிலும் பேருந்து வசதிகள் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அந்த அளவிலே என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிற தென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள் எங்கே நிறுத்தப்பட்டிருந்தாலும், அவற்றை மீண்டும் இயக்க வேண்டும்; வசூலானாலும், ஆகாவிட்டாலும் இயக்க வேண்டுமென்று உத்தர விட்டிருக்கிறோம். குறிப்பிட்ட இடங்களிலே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை நிறுத்தியிருக்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கிறோம். அரசின் கொள்கையே, வசதியில்லாத கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டு மென்பதுதான். எனவே இருப்பதை எடுப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. கடைசியாகக் கட்டணப் பிரச்சினைபற்றிச் சொன்னேன். அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னேன். அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லவில்லை. என்னுடைய திருப்திக்காகச் சொல்லுவார்களென்று எதிர்பார்த்தேன். சொல்லவில்லை, பரவாயில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 13—2—1981 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள் 69, 70, 71 ஆகியவை ஒத்திப் போடப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]